29th January 1963]

(அ) ஆம்.

(ஆ) ரூபாய் 1,34,000.

திரு. எஸ். மாதவன் : *யுத்த கால அவசர நிலையை உத்தேசித்து இது போன்ற திட்டங்களை நிறுத்திவைக்க அரசாங்கத்திற்கு எண்ணம் உண்டா? அல்லது, தொடர்ந்து நிறைவேற்றப்படுமா?*

கனம் திரு. பூ. கக்கன் : *இப்பேர்ப்பட்ட உணவு உற்பத்தித் திட்டங்களை துரிதமாக எடுத்துக்கொள்ள வேண்டும் என்றுதான் ஏற்பாடு செய்யப்படுகிறது.*

அமைச்சர்கள் பயணம்

* 3 கேள்வி.—*திரு. முனு ஆதி : கனம் முதல் அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—*

(அ) கடந்த ஐந்தாண்டுகளில், பல்வேறு இடங்களில் நடைபெற்ற அகில இந்திய காங்கிரஸ் கமிட்டி கூட்டங்களுக்கும் மாநாடுகளுக்கும், நமது மாநில அமைச்சர்கள் கலந்துகொண்டது, அவரவர்களது செலவிலா, அல்லது அரசாங்கச் செலவிலா?

(இ) அரசாங்க செலவில் என்றால், அங்ஙனம் செலவான தொகை எவ்வளவு?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : *(அ) அமைச்சர்கள் கட்சிக் காரியமாகவோ, தங்கள் சொந்தக் காரியமாகவோ பயணம் செய்தால் அரசாங்க நிதியிலிருந்து பயணப்படி எதுவும் வாங்குவதில்லை.*

(இ) இக் கேள்விக்கு இடமில்லை.

(*a*) When the Ministers toured purely for party or private purposes, no travelling allowance was drawn by them from State funds.

(*b*) Does not arise.

* 4 கேள்வி.—*திரு. முனு. ஆதி : கனம் முதல் அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—*

(அ) இளைஞர் காங்கிரஸ் சங்கங்கள் திறப்பு விழாக்களுக்கும், மண்டல காங்கிரஸ் கமிட்டி கூட்டங்களுக்கும் அமைச்சர்கள் சுற்றுப் பயணங்கள் செய்வது அவரவர்களது சொந்தச் செலவிலா? அல்லது அரசாங்கச் செலவிலா?

(இ) அரசாங்கச் செலவில் என்றால், ஏப்ரல் 1962 முதல் ஜூன் 1962 முடிய, இது நாள் வரை, இதற்காக அரசாங்கத்திற்கு ஆகியுள்ள செலவென்ன?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (*a*) When the Ministers tour purely for party or private purposes, no travelling allowance is drawn by them from State Funds.

(*b*) Does not arise.

திரு. முனு. ஆதி: நம்முடைய மாநிலத்திற்குள் நடைபெறுகின்ற எந்த காங்கிரஸ் கட்சி நிகழ்ச்சிக்கு அமைச்சர்கள் சென்றாலும் அவர்கள் அரசினரால் கொடுக்கப்பட்டிருக்கிற காரிலே செல்வதால் அந்தப் பிரயாணம் கட்சிச் செலவிலே செய்யப்பட்டதா அல்லது அரசினர் செலவிலே செய்யப்பட்டதா என்பதுபற்றி பொது மக்களுக்குச் சந்தேகமாக இருக்கிறது. அரசினர் காரிலே செல்லும்போது அது அரசினர் செலவில் இருக்குமா?

கனம் திரு. எம். பக்தவத்சலம்: ஏதாவது ஒரு குறிப்பிட்ட பிரயாணத்தைப்பற்றிக் கேள்வி கேட்டால், யாருடைய செலவிலே அந்தப் பிரயாணம் மேற்கொள்ளப்பட்டது என்று நான் விவரம் கொடுக்கலாம்.

திரு. ஜே. மாதா கவுடர்: சர்க்கார் காரியங்களுக்காகக் கிராமங்களுக்கு அமைச்சர்கள் செல்லும்போது, சர்க்காருடைய செலவில் சென்றாலுங்கூட, அந்தக் காரியங்களுக்காகச் சென்ற விடத்தில் கட்சிக் கூட்டங்களிலும் கலந்துகொள்ளுவதில் தவறு இல்லை என்பதை அமைச்சர்கள் உணர்ந்து, தொடர்ந்து கட்சி வேலைகளில் ஈடுபடுவார்களா?

கனம் திரு. எம். பக்தவத்சலம்: இதை முன்னமேயே உணர்ந்திருக்கிறோம் என்பதைக் கனம் அங்கத்தினர்கள் யாவரும் அறிவார்கள்.

திரு. முனு. ஆதி: எதிர்த் தரப்பிலே ஒரு கனம் உறுப்பினர், 'அமைச்சர்களின் சுற்றுப் பயணத்தின்போது கட்சி வேலையைக் கூடச் செய்யலாம், அதில் தவறு இல்லை' என்று கூறினார். அதே போன்று தாம்பரத்தில் காங்கிரஸ் கூட்டத்திற்கு வருகிற போது அரசினர் காரிலே அமைச்சர் வருவதை நான் பார்த்திருக்கிறேன். அப்படிப்பட்ட பயணம் கட்சியின் செலவில் செய்யப்பட்டதா? அரசினர் செலவில் செய்யப்பட்டதா?

கனம் திரு. எம். பக்தவத்சலம்: அமைச்சர்கள் அரசாங்கம் கொடுத்திருக்கும் காரிலே பிரயாணம் செய்கிறார்கள். அவர்கள் எந்த அலுவலுக்குப் போனாலும் அதில் தான் போகிறார்கள். தனியாகக் கார் வைத்துக்கொள்ளுவது இல்லை.

நகராண்மைக் கழகங்கள் (சட்டசபை உறுப்பினர்களின் பங்கு)

* **5 கேள்வி.—திரு. க. ர. நல்லசிவம்:** கனம் நகராட்சி நிர்வாக அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) நகர எல்லைக்குள் வசிக்கும் சட்டசபை, பாராளுமன்ற உறுப்பினர்களை நகராண்மைக் கழகங்களில் கௌரவ அங்கத்தினர்களாகச் சேர்த்துக்கொள்ளுமாறு கோரிக்கை ஏதேனும் வந்ததா?

(இ) அதன்மீது என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது?